**தூதுவர் அலெய்னா பி.டெப்லிட்ஸ்**
**உணவு ஊக்குவிப்பு நிகழ்வு**
**நவம்பர் 15, 2018**

**தூதுவர் டெப்லிட்ஸ்** - நன்றி, மற்றும் மாலை வணக்கம். கொழும்பில் நான் கலந்துகொள்ளும் முதலாவது பொது நிகழ்வு இது என்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். நான் பெரிதும் ஆர்வம்காட்டும் உணவின் ஊக்குவிப்பு நிகழ்வைக் கொண்டாடக் கிடைத்திருப்பதும், அதுவும் அமெரிக்க உணவுகளை காட்சிப்படுத்துதக் கிடைத்திருப்பதும் இரட்டிப்பு மகிழ்ச்சியை தருகிறது.

ஏனைய அனுசரணையாளர்களுடன் ஹில்டன் ஹோட்டலும் எம்முடன் இணைந்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவரையும் சந்திக்க சந்தர்ப்பம் கிடைத்திருப்பதுடன், அமெரிக்க விவசாயிகள் மற்றும் உணவு உற்பத்தியாளர்கள் வழங்க வேண்டிய உற்பத்திகளை நீங்களும் அனுபவிக்கின்றீர்கள்.

நாம் உங்களுக்கு வெறுமனே சுவையை வழங்க எதிர்பார்க்கவில்லை. இன்று இரவு மேலும் பல சுவைகளை ருசிக்கவைக்க விரும்புகிறோம்.

இலங்கைக்கும், உலகுக்கும் உயர்தரத்திலான உற்பத்திகளை அனுப்பவே அமெரிக்க விவசாயிகளும், கம்பனிகளும் உழைக்கின்றனர். பலசரக்கு வியாபாரிகள், ஹோட்டல்காரர்கள் மற்றும் உணவகங்களை நடத்துவோர் மாதிரிகளை சுவைத்துவிட்டு நாளை அவற்றை கொள்வனவு செய்வது தொடர்பில் சிந்திப்பீரகள் என நம்புகின்றோம். உங்களுக்காகவும் உங்கள் நுகர்வோர்களுக்காகவும் அமெரிக்க உற்பத்திகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை உங்களுக்கு உதவியாக இருக்கும் என நம்புகின்றோம். இவற்றை சுவைத்துப் பார்ப்பதன் ஊடாக நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள் என்பது எமக்கு நிச்சயமாகத் தெரியும்.

அமெரிக்கா உயர்தொழில்நுட்ப மென்பொருள் உற்பத்திகள், நவீன விமானத் தயாரிப்பு, இலத்திரனியல் கார்கள் போன்ற உற்பத்திகளுக்கு பெயர்போனதாக இருந்தாலும் நாம் விவசாய நாடாக அடையாளம் காணப்பட்டுள்ளோம். அமெரிக்க பொருளாதாரத்தில் விவசாயத்துறை கணிசமான பங்களிப்பைச் செலுத்துகிறது.

2016 இல் அமெரிக்க விவசாயப் பண்ணைகள் மற்றும் உணவு உற்பத்தியாளர்கள் 4 மில்லியனுக்கும் அதிகமான பணியாளர்களைக் கொண்டிருந்ததுடன், 135 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான உணவுகள், குடிபானங்கள் உலக நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்வதற்காக உற்பத்தி செய்யப்டப்பட்டுள்ளன. இதன் காரணமாக அமெரிக்கர்களும் உலகின் ஏனைய நாடுகளில் உள்ளவர்களும் உணவு விநியோகத்தை தடையின்றிப் பெற்றுக் கொள்வதுடன், சகலரும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலும், பாதுகாப்பன முறையிலும் உணவுப்பொருட்கள் வழங்கப்படுகின்றன. இவற்றை வினைத்திறனான முறையில் வழங்கும் அமெரிக்கப் பண்ணைகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். உலகில் முன்னணி உணவு மற்றும் விவசாய உற்பத்திகளின் ஏற்றுமதியாளர்களாக விளங்குவதையிட்டு நான் பெருமையடைவதுடன், உணவு ஏற்றுமதி தொடர்பில் இலங்கையுடன் கொண்டிருக்கும் உறவுகளை மேலும் பலப்படுத்த விரும்புகின்றோம்.

2017ஆம் அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட 336 மில்லியன் அமெரிக்க டொலர் மொத்த ஏற்றுமதியில் 134 மில்லியன் அமெரிக்க டொலர் விவசாய உற்பத்திகள் காணப்படுகின்றன. இந்த எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும் என நாம் விரும்புகின்றோம். புதிய பழங்கள், சீஸ் வகைகள் அல்லது பால் உற்பத்திகள் அல்லது தானியங்கள் போன்றன இலங்கையின் விவசாயத்தொழில்துறைக்கு ஊக்குவிப்பாக அமைவதுடன், சராசரி இலங்கையர்கள் அமெரிக்காவின் விவசாய மற்றும் உணவு உற்பத்திகளில் பல தெரிவுகளைக் கொண்டுள்ளனர்.

அமெரிக்காவானது இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாகத் தொடர்ந்தும் காணப்படுவதுடன், இலங்கை விவசாயிகள் மற்றும் அமெரிக்க நுகர்வோர் இரு தரப்பு வர்த்தகத்தினால் நன்மையடைகின்றனர். 2017ஆம் ஆண்டு இலங்கை 195 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான விவசாய உற்பத்திகளை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

இதன்மூலம் அமெரிக்க நுகர்வோர் உலகப் புகழ்பெற்ற இலங்கையின் தேயிலை, வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை நுகர வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

நீங்கள் உணவுகளை சுவைப்பதற்கான நேரத்தை மேலும் எடுத்துக்கொள்ளவிரும்பவில்லை. எனினும், எமது அனுசரணையாளர்கள் மற்றும் உற்பத்திகளை வழங்கக்கூடியவர்கள் பற்றிய விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

மிக்க நன்றி!